# ஹதீஸ்களும் அதன் வகைகளும்

Moulavi M.M. Zaky B.A. (Hons)

**பகுதி : (4)**

A. ஆதார பூர்வமானவைகளா பலவீனமானவைகளா என்பதில் அறிஞர்கள் மத்தியில் கருத்து முரண்பாடானவை:

இதுவரை வெளிவந்துள்ள ஹதீஸ் கிரந்தங்கள் 4 வகைப்படுகின்றன. அவை வருமாறு:

A. ஆதார பூர்வமான ஹதீஸ்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ள நூற்கள்.
B. ஆதாரபூர்வமான மற்றும் பலவீனமான ஹதீஸ்கள் கலந்து இடம்பெற்றுள்ள நூற்கள்.
C. பலவீனமான செய்திகளை மாத்திரம் தனியாகத் தொகுத்து எழுதப்பட்ட நூற்கள்.
D. இதுவரை தரப்படுத்தல் பணிக்கு உட்படுத்தப்படாத ஹதீஸ்கள் இடம் பெற்றுள்ள நூற்கள்.

இஜ்திஹாத் எனும் இஸ்லாமிய உலகில் தகுதிவாய்ந்த அறிஞர்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுப்பணியானது உலகம் இருக்கின்றவரை நிலைத்திருக்கின்ற மிகச்சிறந்த பணியும் இபாதத்தும் ஆகும். எவ்வகையான வேறுபாடுமின்றி இஸ்லாமிய சரீஅத்தின் அனைத்துத் துறைகளையும் இப்பணி உள்ளடக்கி நிற்கின்றது.

இவ்வகையில் ஹதீஸ்துறை சார்ந்த, இஜ்திஹாத் செய்கின்ற ஆற்றல் பெற்ற இஸ்லாமிய அறிஞர்கள் இன்றுவரை உலகில் இருக்கின்றனர். இவர்கள் ஹதீஸ்களைத் தரப்படுத்துகின்ற பணியில் ஈடுபட்டு, தமது ஆய்வின் இறுதியில் சரியான முடிவுக்கு வந்து விட்டால் இரு கூலிகளைப் இவர்கள் பெறுர். பிழையான முடிவுக்கு வந்து விட்டால் தாம் மேற்கொண்ட முயற்சிக்குரிய கூலியை இவர்கள் பெறத்தகுதியுடையோர் என்பது நபி மொழியின் கருத்தாகும்.

இந்தக் கருத்தின் பின்னணியுடன் மேற்கூறப்பட்ட 4 வகையான நூற்களையும் ஒவ்வொன்றாக நோக்குவோம்.

A. ஆதார பூர்வமான ஹதீஸ்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்ட நூற்கள்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைக்குட்பட்ட புகாரி, முஸ்லிம் ஆகிய ஹதீஸ் கிரந்தங்களில் ஒரு சில பலவீனமான ஹதீஸ்கள் காணப்படுகின்றன. இப்னு ஹிப்பான் மற்றும் இப்னு குஸைமா போன்ற நுற்களிலும் குறைந்த அளவிலான பலவீனமான ஹதீஸ்கள் இடம் பெற்றுள்ளன. இதனை சமகால ஹதீஸ்கலை அறிஞர்களின் ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

B. "ஸஹீஹ், ஹஸன், ழஈப்" ஆகிய மூன்று தரத்திலுமான ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ள நூற்கள்:

இவ்வகை சார்ந்த பல நூல்கள் தரப்படுத்தற்பணிக்கு உட்படுத்தப் பட்டுவிட்டன. இவற்றில் பெரும்பாலான நுற்களை காலஞ்சென்ற ஹதீஸ்கலை மேதை ஷேக் முஹம்மத் நாஸிருத்தீன் அல் அல்பானீ (ரஹ்) அவர்கள் தரப்படுத்தினார். இதற்கு "ஸுனன்" வகையைச் சேர்ந்த நூற்களை உதாரணமாகக் கொள்ளலாம். இந்நூற்றாண்டில் இப்பணியை உலகம் போற்றும் அளவுக்கு மேற்கொண்ட அறிஞர் இவரே! அல்லாஹ் இவர்களுக்கு மேலான சுவனத்தை வழங்குவானாக!

அவ்வாறே இன்னும் பல முக்கியமான அறிஞர்கள் இப்பணியை தனிப்பட்டமுறையில் மேற்கொள்கின்றனர். அவ்வாறே கல்வி சார் நிறுவனங்களும் இப்பணியை மேற் கொண்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

C. பலவீனமான வகையைச் சார்ந்த ஹதீஸ்களை மாத்திரம் தனியாகத் தொகுத்து எழுதப்பட்டுள்ள நூல்கள் :

இதற்கு இமாம் இப்னுல் ஜவ்ஸீ (ரஹ்) அவர்களுடைய "அல்மௌலூஆத்", இமாம் ஷவ்கானீ (ரஹ்) அவர்களுடைய "அல்பவாஇத்" , இமாம் அல்பானீ (ரஹ்) அவர்களுடைய " அல்லஈபா வல் மவ்லூஆ" போன்ற நூற்களை உதாரணங்களாகக் கூறலாம்.

இந்நூற்களின் நோக்கம் பலவீனமான மற்றும் இட்டுக்கட்டப்பட்ட வகையைச் சார்ந்த ஹதீஸ்களின் பதிவுகளில் இருந்து இஸ்லாமிய உம்மத்தைப் பாதுகாப்பது ஆகும்.

ஆச்சரியம் என்னவெனில், ஹதீஸ்கலை ஞானமற்ற, இவ்வாறான நூற்களின் பொருளடக்கம் பற்றிய ஞானமில்லாத பலர் இவ்வகையைச் சார்ந்த நூற்களில் இடம்பெற்றுள்ள செய்திகளையும் ஆதாரமாகக் கொள்வது தான்.

ஆகவே, ஹதீஸ்கலை தொடர்பான ஆரம்ப அறிவு அனைவருக்கும் கிடைத்திட வேண்டும். இதுபற்றிய விரிவான ஞானம் அரபு மத்ரஸா மாணவ மாணவிகளுக்கும்,

சன்மார்க்கப் போதகர்களுக்கும் கிடைத்திடவேண்டும். இதற்கு வழிசெய்வது சமூகத்தில் உள்ள கல்விமான்கள் மீதுள்ள கடமைகளில் ஒன்று.

D. தரப்படுத்தற்பணிக்கு இதுவரை உட்படுத்தப்படாத நுற்களில் இடம்பெறும் ஹதீஸ்கள்:

இவ்வாறு இதுவரை இப்பணிக்குட்படாத நுற்களின் எண்ணிக்கையும் அவற்றில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கையும் ஏராளம். இவற்றையும் ஆய்வுசெய்து தரப்படுத்தி மக்களுக்கு வழங்க வேண்டியது காலத்தின் தேவையும், மிகச் சிறந்த இபாதத்துக்களில் ஒன்றுமாகும்.

இன்று இந்நடவடிக்கையை அர்ப்பண சிந்தனையோடு பல அறிஞர்கள் மேற்கொண்டு, தொண்டு செய்து வருகின்றனர். அதே வேளை பல இஸ்லாமியப் பல்கலைக்கழகங்களும் முதுமானி மற்றும் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுகளினூடாக இப்பணியை மேற்கொண்டு வருகின்றன. இதனால் நாளுக்கு நாள் பொதுவாக இஸ்லாமியக் கலைக்களஞ்சியங்களும், ஹதீஸ் கிரந்தங்களும் வெளிவந்த வண்ணமுள்ளன . எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

பொதுவாக ஏற்கனவே அறிஞர்களால் ஆதார பூர்வமானவை எனத் தீர்மானிக்கப்பட்ட ஹதீஸ்களில் பலவீனமானவைகளும், பலவீனமானவை எனத் தீர்மானிக்கப்பட்டவற்றில் ஆதாரபூர்வமான செய்திகளும் காணப்படுவதாகச் சமகால ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அவ்வாறே இன்னும் சில ஹதீஸ்கள் குறித்து, சில அறிஞர்கள் "இவை ஆதார பூர்வமானவை" என்றும் , இன்னும் சிலர் "இவை பலவீனமானவை" என்றும் முரண்பாடான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான முரண்பாடுகளுக்கு காரணம் அறிஞர்கள் மத்தியில் ஹதீஸ்களை தரப்படுத்துவது குறித்து காணப்படுகின்ற அளவுகோல்களும், அதற்காக மேற்கொள்கின்ற வழிமுறைகளும் முரண்படுவதேயாகும். இவையல்லாத இன்னும் பல காரணங்களையும் அறிஞர்கள் கூறுவர்.

இவ்வாறான நற்பணிகளில் ஈடுபடுகின்ற நற்பேற்றினையும், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அமல் செய்கின்ற பாக்கியத்தினையும் அல்லாஹ் நம் அனைவருக்கும் தந்தருள்வானாக!

அல்லாஹ் மிக அறிந்தவன்.